## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தனபால் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | கிராமம் | : |
| வயது | : | | தாலூக்கா | : |
| நாள் | : | | மாவட்டம் | : |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 25.09.1998 ம் தேதியிட்ட வாரிசு சான்றின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 05.06.1998 ம் தேதியிட்ட ராஜமாணிக்கத்தின் இறப்புச் சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். மின் இணைப்பு எண் 316 ன் மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகும். மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணிக்கைகள்) **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 06.08.2022 ம் தேதியிட்ட உயில் ஆவணத்தின் நகல் கோரி அளிக்கப்பட்ட குறிப்பாணை **வா.சா.ஆ.5** ஆகும் (வா.சா.அ.5 ஆவணம் தற்போது தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது) கடந்த 18.05.2001 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 25.11.2014 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் பதிவு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆகும். கடந்த 30.06.2020 ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது

**வா.சா.ஆ.8** ஆகும். கடந்த 12.08.2020 ம் தேதியிட்ட புகார் மனுவின் நகல் **வா.சா.ஆ.9** ஆகும். ஆதார் அட்டையின் நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-T.Praveenkumar
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.